DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.187/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.6 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கனகராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : கருப்பண்ணன் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.03.2022.

**முதல் விசாரணை:**

நான் உடுமலை காவல் ஆய்வாளராக பணியில் இருந்து பணி ஒய்வு பெற்ற சூலுரில் குடியிருந்து வருகிறேன். 31.08.2012 ம் தேதி நான் உடுமலை காவல் நிலைய ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சுப்ரமணியம் காவல் நிலைய குற்ற எண் 656/12 இதச பிரிவு 468,471,420 ஆகிய வழக்கின் முதல் தகவல் அறிக்கையை எனது விசாரணைக்காக கொடுத்தார். நான் இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்டு நிலையத்தில் ஆஜரில் இருந்த சாட்சிகள் சந்தியா, அவரது கணவர் மகேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்கள் வாக்குமூலம் படி அவர்கள் முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளபடி மின் இணைப்பு எண்.245 தற்போது கோபாலகிருஷ்ணன் என்பவர் மின் இணைப்பை போலி கையொப்பம் செய்து மாறுதல் பெற்றது சம்பந்தமாக அதனுடைய அவணங்களை வேண்டி உதவி செயற்பொறியாளர் உடுமலை மின் பகிர்மானம் அவர்களுக்கு வேண்டுதல் கடிதம் கொடுத்தேன். 10.09.2012 அன்று இவ்வழக்கின் எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்

ஜாமீன் பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் மேலும் சத்தியா மகேஷ் அவர்களின் மாதிரி கையொப்பம் பெற்று அதை ஒப்பீடு செய்ய வேண்டி கனம் நீதித்துறை நடுவர் மூலம் தடைய அறிவியல் துறைக்கு அனுப்பிவைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**